# ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்

**1.** நாகர்கோவில் நகராட்சி பகுதி 52 வார்டுகளிலும் உள்ள பேருந்து பயணிகள் நிழலகங்களில் பழைய நிழலகங்களை மாற்றி புதிய துரு பிடிக்காத எஃகிலான (Stainless Steel) நிழலகங்கள் அனைத்தும் ஒரே மாதிரியான வகையில் தங்கள் சொந்த செலவில் அமைத்து ( Boot Bult operate own transfer) விளம்பர சட்டத்தின் கீழ் வணிக ரீதியான விளம்பரங்களுடன் இயக்கி பராமரிப்பு செய்திட விருப்பம் உள்ளவர்களிடமிருந்து 20.03.2013 – ஐ இறுதி நாளாக கொண்டு நான்கு சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனுமதி பெற்று செயல்படுத்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண்.1 – 38 எண்ணம் நிழலகங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | திரு.கே.எஸ்.நீலகண்டன், ஸ்ரீ சூர்யா கிரியேசன்ஸ் | ரூ.16100/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 2 | திரு.என்.கே.தானேஷ்குமார், ஆட் பிளஸ் | ரூ.16170/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 3 | திரு.என்.ராமச்சந்திரன்<br>வின்னர் கிரியேசன்ஸ் | ரூ.16200/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 4 | திரு.எம்.ஜார்ஜ் மைக்கேல் பெல்கிஸ்<br>சாரா அட்வெர்ஸ்ட்மென்ட் | ரூ.16225/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| | **சிப்பம் எண். 2 – 40 எண்ணம் நிழலகங்கள்** | |
| 1 | திரு.கே.எஸ்.நீலகண்டன்<br>ஸ்ரீ சூர்யா கிரியேசன்ஸ் | ரூ.15000/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 2 | திரு.எம்.ஜார்ஜ் மைக்கேல் பெல்கிஸ்<br>சாரா அட்வெர்ஸ்ட்மென்ட் | ரூ.15500/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 3 | திரு.என்.ராமச்சந்திரன்<br>வின்னர் கிரியேசன்ஸ் | ரூ.16000/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 4 | திரு.என்.கே.தானேஷ்குமார்,<br>ஆட் பிளஸ் | ரூ.16500/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| | **சிப்பம் எண்.3 – 40 எண்ணம் நிழலகங்கள்** | |
| 1 | திரு.என்.கே.தானேஷ்குமார்,<br>ஆட் பிளஸ் | ரூ.15700/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 2 | திரு.எம்.ஜார்ஜ் மைக்கேல் பெல்கிஸ்<br>சாரா அட்வெர்ஸ்ட்<br>மென்ட். | ரூ.16400/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 3 | திரு.கே.எஸ்.நீலகண்டன்<br>ஸ்ரீ சூர்யா கிரியேஷன்ஸ் | ரூ.16500/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 4 | திரு.என்.ராமச்சந்திரன்<br>வின்னர் கிரியேசன்ஸ் | ரூ.16600/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| | **சிப்பம் எண்.4 – 38 எண்ணம் நிழலகங்கள்** | |
| 1 | திரு.எம்.ஜார்ஜ் மைக்கேல் பெல்கிஸ்<br>சாரா அட்வெர்ஸ்ட்மென்ட். | ரூ.16000/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 2 | திரு.என்.கே.தானேஷ்கும,,,,ார், ஆட் பிளஸ் | ரூ.17500/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 3 | திரு.என்.ராமச்சந்திரன்<br>வின்னர் கிரியேசன்ஸ் | ரூ.17900/– ( ஒரு எண்ணத்திற்கு) |
| 4 | திரு.கே.எஸ்.நீலகண்டன்<br>ஸ்ரீ சூர்யா கிரியேஷன்ஸ் | ரூ.17999/– ( ஒரு எண்ணத்திற்கு) |

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மேற்கண்டவாறு நான்கு எண்ணம் சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்கண்டவாறு அதிகப்படியான தொகைக்கு கேட்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

2. சிப்பம் எண்.1 .திரு.எம்.ஜார்ஜ் மைக்கேல் பெல்கிஸ் – ரூ.16225/–
சாரா அட்வெர்ஸ்ட்மென்ட்
சிப்பம் எண்.2 – திரு.என்.கே.தானேஷ்குமார், – ரூ.16500/–
ஆட் பிளஸ்
சிப்பம் எண்.3 – திரு.என்.ராமச்சந்திரன் – ரூ.16600/–
வின்னர் கிரியேசன்ஸ்
சிப்பம் எண்.4 – திரு.கே.எஸ்.நீலகண்டன் – ரூ.17999/–
ஸ்ரீ சூர்யா கிரியேஷன்ஸ்

2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று செயல்படுத்திட அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.4259/2013/இ3

**தீர்மான எண் : 3052 – பெரும்பாலான உறுப்பினர்கள் பொருளில் கண்ட ஏலத்தொகையைவிட கூடுதல் தொகைக்கு எலம் போகும் எனவும் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் வரும் என தெரிவித்ததால் இதை ரத்து செய்து தனித்தனியாக மறு ஏலம் விட மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

2. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19– ல் ரஹ்மத் கார்டன் பகுதியில் புதிய மின் கம்பங்கள் அமைத்து அதில் தெருவிளக்கு அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.60,870/– ஆகும். மேற்படி செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – மேற்படி தெருவிளக்கு பணி அவசிய அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மின்சார வாரியத்திற்கு வழுங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.8535/2013/இ4

**தீர்மான எண் : 3053 – கடந்த முறை இந்த பொருள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினருடன் விளக்கம் கேட்க பொருள் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த மன்ற கூட்டத்தில் நகரமைப்பு பிரிவு அலுவலர்கள் விளக்கம் அளித்ததினாலும் நகராட்சி உயர் அதிகாரியின் சிறப்பு குறிப்பின்படியும் மேற்படி பணி செய்யப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் செய்ல்பட்டு வந்த கட்டித்தினை தபால் துறை காலி செய்து ஒப்படைத்துள்ளது. மேற்படி கட்டித்தினை பொது மேலாளர் – கன்னியாகுமரி மாவட்டக்கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் – நாகர்கோவில் அவர்களின் 23.07.2013 – ம் தேதிய கடிதத்தில், பால் உற்பத்தியாளர் ஒன்றிய பணியாளர்கள் மூலம் ஆவின் பாலகம் நடத்த அனுமதி கேட்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தினை ஆவின் பாலகம் நடத்த வாடகைக்கு வழஙகும் பொருட்டு, மன்ற அனுமதி பெறப்பட்டு, மண்டல போக்குவரத்து அதிகாரி ( Regional Transport Authority ) அனுமதி பெற்று, பொதுப்பணித்துறை வாடகை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்து , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஒப்புதல் பெற்று வாடகைக்கு வழஙகும் பொருட்டு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.14149/2013/அ13

**தீர்மான எண் : 3054 – ஏற்கனவே வடசேரி பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் சுகாதார ஆய்வாளர் அறையில் கிழக்கு பக்கத்தில் உள்ள இடத்தில் ஏற்கனவே சுகாதார ஆய்வாளர் அறை எவ்வளவு அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்ததோ அதே அளவில் கிழக்கு அற்றத்தில் RMS அலுவலகம் இயங்கி வந்த இடத்தில் சுகாதார ஆய்வாளர் அறையினை பிரித்து மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. சுகாதார ஆய்வாளர் அறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு இடம் போக மீதி இடத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று மேற்கண்ட இடத்தினை ஆவின் பாலகத்திற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த சுகாதார ஆய்வாளர் அறையினை பொது ஏலம் விட்டு நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்திட மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.**

4. 1. இந்நகராட்சிக்கு சொந்தமான திரு.அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதைமடம் என்ற பெயரில் சுமார் 75 ஆண்டுகளாக இருந்து வருகிறது. மேற்படி இடத்தில் இரவு ஆதரவேற்றோர் இல்லத்தை நகராட்சியே நேரடியாக பராமரித்து வருகிறது. தற்போது நகராட்சிக்கு எந்த செலவும் இல்லாமல் இந்த மடத்தில் தஙகக்கூடிய ஆதரவற்றோர்/அனாதைகளுக்கு தொண்டு செய்வதற்கு சேவாலயா தொண்டு நிறுவனம்,. சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் என்ற தொண்டு நிறுவனத்திற்கு நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் இடத்தில் இயஙகிவரும் ஆதரவற்றோர் மற்றும் ஏழ்மை நிலையில் வாழ்க்கையில் இறுதி கட்ட நிலையில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிட்சை மையமும் சேர்த்து பராமரிக்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கூட்ட நடவடிக்கை நாள் 11.06.2013 – ன் படி அனுமதி வழஙகப்பட்டுள்ளது. இந்த அனுமதி குத்தகை அல்ல.

2. சேவாலயா இஙகு ஏழ்மை நிலை மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள நோயாளிகளுக்கு வலி நிவாரணி மற்றும் ஆதரவு சிகிட்சை மையமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும். எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அஙகு நடைபெற அனுமதிக்கக்கூடாது. அப்படி நடப்பதாக தெரிய வந்தால் உடனடியாக அனுமதி ரத்து செய்யப்படும்.

3. நகராட்சிக்கு சொந்தமான இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இதர நகராட்சி சட்ட விதிமுறைகளுக்கும் சேவாலயா கட்டுபடவேண்டும்.

4. நகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தில் உள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் நகராட்சி சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு சேவாலயாவே முழு பொறுப்பாகும்.

5. ஜாதி மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பயன்படுத்திட வேண்டும்.

6. நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் வளாகத்தினுள் தோட்டம் அமைத்தல் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல் ஆகிய செயல்பாடுகளை சேவாலயாவே ஏற்க வேண்டும். வளாகத்தினை தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும்.

7. வளாகத்தினுள் கூரை வேந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்குடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்க கூடாது.

8. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பின் கூடுதல் கட்டுமானம் தேவைப்பட்டால் நகராட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செய்ய வேண்டும். பராமரிப்பு முடிந்து திருப்பி ஒப்படைக்கும் போது இதற்கு எந்தவித இழப்பீடும் நகராட்சியால் வழங்கப்படமாட்டாது.

9. சேவாலயா மூலம் செயல்படுத்தப்படும் வலி நிவாரணி மற்றும் ஆதரவு சிகிட்சை மையத்திற்கு தேவையான மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்களை நியமிப்பது ஆதரவற்ற நோயாளிகளை அனுமதித்து அவர்களுக்கு தேவையான மருந்து மற்றும் சிகிட்சை அளித்து பராமரிப்பு செய்வது போன்றவற்றிற்கு சேவாலயாவே முழுப்பொறுப்பாகும்.

10. சேவாலயா நிறுவனமானது தனது பயன்பாட்டை நிறுத்தி கொண்டு திரும்ப ஒப்படைக்க விரும்பினால் நகராட்சிக்கு இரண்டு மாதஙகளுக்கு முன்பே அறிவிப்பு முறையாக வழஙக வேண்டும். நகராட்சி சேவாலயா பயன்படுத்தி வரும் வளாகத்தை திரும்ப ஏற்க விரும்பினால் பராமரிக்கப்பட்டு வரும் ஆதரவற்ற நோயாளிகளை கருத்தில் கொண்டு அவர்கள் சேவாலயா வேறு இடத்தில் பராமரிக்க இரண்டு மாதம் கால அவகாசம் வழஙகப்படும்.

11. சேவாலயா மூலம் பராமரிக்கப்படும் மையத்திற்கான மின்சார கட்டணம் நகராட்சி ஆணையர் பெயரில் மேற்படி சேவாலயா தொண்டு நிறுவனம் செலுத்த வேண்டும் மற்றும் குடிநீருக்கான கட்டணம் சேவாலயா நகராட்சிஆணையர் பெயரில் செலுத்த வேண்டும்.

12. சேவாலயாவை பார்வையிடும் நகராட்சி அதிகாரிகள் சுகாதாரம் தொடர்பான பணிகளை ஆய்வு செய்யும் போது அவர்கள் கூறும் அறிவுரைகளை ஏற்று சேவாலயா செயல்படவேண்டும்.

13. நகராட்சியால் அனாதைமடம் மைதானத்தில் சேவாலயா நிறுவனத்திற்கு ஒதுக்கப்படும் இடம் மற்றும் அஙகிருக்கும் பொருட்களின் விபரம் மற்றும் அஙகுள்ள மரஙகளின் விபரம்

<u>**ஒதுக்கப்படும் இடம்**</u>

| | | |
|---|---|---|
| கிழக்கு மேற்காக | – | 75 மீட்டர் நீளம் |
| தெற்கு வடக்காக | – | 63 மீட்டர் நீளம் |

<u>**ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளின் விபரம்**</u>

| | | |
|---|---|---|
| ஓடு வேய்ந்த கட்டிடம் | – | 20.60 மீட்டர் நீளம் 10 மீட்டர் அகலம் |
| டன்ஷீட் கட்டிடம் | – | 19.80 மீட்டர் நீளம் மற்றும் 10.00 மீட்டர் அகலம் |
| காஙகீரிட் கூரை கழிப்பிடகட்டிடம் | – | 13.00 மீட்டர் நீளம் மற்றும் 4.60 மீட்டர் அகலம் |
| 6 கோப்பைகள் உள்ளது | | |

<u>**இதர பொருட்களின் விபரம்**</u>

| | | |
|---|---|---|
| டியூப் லைட் பிட்டிங | – | 40 எண்ணம் |
| பேன் | – | 8 எண்ணம் |
| 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங | – | 2 எண்ணம் |

<u>**அப்பகுதியிலுள்ள உயிருள்ள மரஙகள் விபரம்**</u>

| | | |
|---|---|---|
| வேம்பு மரம் | – | 16 எண்ணம் |
| வாகை மரம் | – | 2 எண்ணம் |
| உடை மரம் | – | 1 எண்ணம் |
| காற்றாடி மரம் | – | 1 எண்ணம் |

மேலும் இரவு நேர காப்பக ஷெட் மற்றும் இரவு நேர ஆதரவற்ற நோயளிகள் காப்பகத்திற்கான கழிப்பிடம் கட்டப்பட உள்ளது.

14. நகராட்சியால் ஒதுக்கப்படும் இடத்தில் மட்டுமே சேவாலயா தனது பணியினை செயல்படுத்த வேண்டும். இதர காலியிடத்தில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.

15. சேவாலயாவில் ஆதரவற்ற நோயாளிகள் பராமரிப்பு பணியாளர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும். வேற எந்த வெளிநபர்களையும் உள்ளே தங்க அனுமதிக்க கூடாது.

16. சேவலாயாவில் ஆதரவற்ற நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் மருந்து கழிவு பொருட்களை ஒவ்வொரு நாளும் சேகரித்து தமது சொந்த செலவில் நகராட்சி உரக்கிடஙகிற்கு எடுத்துசெல்ல வேண்டும்.

17. சேவாலயாவில் ஆதரவற்ற நோயாளிகளால் பயன்படுத்தப்படும் கழிவறைகளை தினமும் இரண்டு நேரம் பினாயில் மூலம் சுத்தம் செய்யப்படவேண்டும்.

18. சேவாலயா ஆதரவற்ற நோயாளிகளை அனுமதிப்பது மற்றும் பராமரிப்பு தொடர்பான பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும்.

19. மேற்படி வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிட்சை மையம் பராமரிப்பு அனுமதியை தொடர்வதும் மறுப்பதும் நகராட்சிமுடிவை பொறுத்தது.

20. நகராட்சிக்கு சொந்தமான இந்த மையத்தின் நடவடிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்அமைக்கும் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் தலைமையிலான குழு ஆய்வு செய்து தெரிவிக்கும் கருத்துக்களை அவ்வப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்ம்

21. நகராட்சிக்கு சொந்தமான மேற்படி மையத்தின் செயல்பாடு மற்றும் நடவடிக்கை அறிக்கையை 3 மாதத்திற்கு ஒருமுறை நகராட்சிக்கு அனுப்ப வேண்டும்.

22. மேலே உள்ள நிபந்தனைகள் ஏதேனும் மீறப்பட்டால் வழஙகப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

மேற்சொன்ன நிபந்தனைகளை ரூ.120/– முத்திரை தாளில் நகராட்சி ஆணையர், நாகர்கோவில் மற்றும் திரு.எஸ்.பி.பெருமாள், இயக்குனர் – சேவாலயா 12–90 கேப்ரோடு , சுசீந்திரம் , கன்னியாகுமரி மாவட்டம் இரண்டு பேரும் பதிவு பத்திரம்மூலம் ஒப்பந்தம் செய்து மேற்படி இடத்தினை சேவாலயா வசம் ஒப்படைக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10790/2013/எப்.1

**தீர்மான எண் : 3055 – அனுமதிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் சிறிதளவு கூட மாறாமல் சேவாலயா கடைப்பிடிக்க வேண்டும். மீறினால் சேவாலய–க்கு வழஙகப்பட்ட அனுமதி உடனடியாக ரத்து செய்யப்படும்.**

5. நகராட்சிக்குட்பட்ட நகரளவு எண்.சி20/9, 10,11, (H) – ல் கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி திரு.எம்.சுரேந்திரன் என்பவர் விண்ணப்பம் செய்ததினை பரிசீலனை செய்து அன்னாருக்கு கட்டிட விண்ணப்ப எண்.68/2012/எப்.2 கட்டிட அனுமதி எண்.46/2012 மற்றும் திட்ட அனுமதி எண்.97/2012– ன்படி கட்டிட அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டிட அனுமதி வழஙகப்பட்டது தொடர்பாக திருமதி.சிவகாமி க/பெ.ஸ்ரீசஙகர் என்பவர் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண்.159/2012– ன்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கிற்கு கட்டிட அனுமதி வரைபட நகல் வழஙக கேட்டு நீதிமன்றம் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே கட்டிட அனுமதி வரைபட நகல் வழஙகுவது தொடர்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.எஸ்.ரெஜினிதேவி, பி.ஏ.பி.எல்.,அவர்களிடம் சட்ட கருத்துரு கேட்டு கடிதம் அனுப்பப்பட்டதில் வழகறிஞர் அவர்கள் கட்டிட அனுமதி வரைபட நகல் வழஙக தமது சட்ட கருத்துருவில் தெரிவித்துள்ளார்.

மேலும் சட்ட கருத்துரு வழஙகியதற்காக வழக்கறிஞர்கள் அவர்கள் ரூ.500/– வழஙக கேட்டு தமது 22.06.2013– ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே சட்ட கருத்துரு வழஙகியதற்கு ரூ.500/– நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1765/2013/எப்.2

**தீர்மான எண் : 3056 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>புதிய பொருள்கள்</u>

1. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 34 வார்டுகள் மூன்று மண்டலஙகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் மயபடுத்திட கருத்துரு அனுப்பப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண்.ந.க.எண்.10580/பி3/2012 நாள் 07.08.2012 – ன் வழி கீழ்கண்ட அளவுகோல் படி பணியாளர்கள் மற்றும் உபகரணஙகள்படி முன் இசைவு வழஙகப்பட்டிருந்தது.

1. துப்புரவு பணியாளர் 360 பேர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும்.
2. ஓட்டுனர்கள் 8 பேர் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும்.
3. 320 எண்கள் தள்ளுவண்டி/வீல் பேரோ பயன்படுத்தப்படவேண்டும்.
4. 100 எண்கள் டம்பர் பின்கள் பயன்படுத்தப்படவேண்டும்.
5. டம்பர் பிளேசர் லாறி 4 எண்கள் பயன்படுத்தப்படவேண்டும்.

மேலும் ஊதியஙகள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்டவாறும், பணியாளர்களுக்கு ESI, EPF, பாதுகாப்பு உபகரணஙகள், சீருடைகள், இதர வரிகள் ஆகியவற்றை கணக்கிட்டு மதிப்பீடு தயார் செய்திட அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனைஅடிப்படையாககொண்டு மதிப்பீடு ஓர் மெட்ரிக்டன் குப்பையினை அகற்ற ஆகும் செலவினம் ரூ.2644/– என பொறியியல் பிரிவிலிருந்து தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேற்படி மதிப்பீட்டு தொகையினை அடிப்படையாக கொண்டு ஒப்பந்தப்புள்ளி 05.12.2012 அன்று தேசிய அளவில் கோரப்பெற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் கீழ்கண்ட விபரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரார் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ( % ல்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | திரு.பி.கோபிநாத ரெட்டி | 9.64 % அதிகம் |
| 2 | திரு.சி.ஆர்.வீரநாராயணச்சாரி | 14.22 % அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் L1 - ன் விலை விகிதம் மதிப்பீட்டைவிட 9.64 % அதிகமாக இருந்ததால் விலை விகிதம் குறைத்து தரக்கோரி இசைவு கோரப்பெற்ற நிலையில் L1 – ஆல் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட 4.89% அதிகத்திற்கு இசைவு பெறப்பட்டது. மேலும் L1 ஒப்பந்தக்காரர் தனது ஒப்பந்தப்புள்ளியுடன் Implementation plan சமர்ப்பித்ததுடன் அதில் Door to Door collection - பணிக்கு பணியாளர்கள் ஈடுபடுத்துவதற்கு பதில் டிப்பர் ஆட்டோக்கள் பயன்படுத்தினால் திட்டம் சிறப்பாக செயல்படுத்திட இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்படி விபரத்துடன் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு முன் இசைவு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு கருத்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் தலைமையிலான குழு பரிந்துரை பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.25455/பி3/2012 நாள் 30.04.2013 – ன் படி அனுமதி பெறப்பட்டிருந்தது.

மேற்படி அனுமதியினை தொடர்ந்து திட்டம் செயல்படுத்திட ஏதுவாக LOA அனுப்பி தர ஒப்பந்தக்காரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.18831/எச்.1/2012 நாள் 14.06.2013 – ன் வழி இரட்டை பிரதியில் அனுப்பப்பட்ட நிலையில் ஒப்பந்தக்காரர் தம்மால் மைக்ரோ பிளான் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி திருத்திய Letter of Award ( LOA ) தமக்கு மூன்றாண்டு காலத்திற்கு செயல்படுத்திட வழங்குமாறும் கேட்டுள்ளதுடன் மைக்ரோ பிளான் – ல் தாம் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன் திட்டம் செயலாக்கப்பட உள்ள நகராட்சி பகுதியினை முழுமையாக பார்வையிட்டதுடன் மற்றும் தமக்கு இத்துறையில் 20 வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளதாகவும் குறிப்பிட்டு தள்ளுவண்டி /வீல் பேரோக்களுக்கு பதில் டிப்பர் ஆட்டோக்கள் பயன்படுத்திடும் நிலையில் பணியினை சிறப்பாக செயலாக்கப்படும் எனவும், இத்திட்டத்திற்கு 25 டிப்பர் ஆட்டோக்கள் மற்றும் இரண்டு டிராக்டர்கள் பயன்படுத்த உள்ளதாகவும், மேற்படி ஆட்டோக்களில் ஒலி பெருக்கி வசதியுடன் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன் டிப்பர் ஆட்டோக்கள் தள்ளு வண்டிகளுக்கு பதில் பயன்படுத்துவதால் 127 எண்கள் தள்ளு வண்டிகளுக்கான பணியாளர்களை குறைவு செய்து டிப்பர் ஆட்டோக்கள் பயன்படுத்திடவும் அனுமதி கோரியதுடன் தமது 02.08.2013 – ம்தேதிய கடிதத்தில்

1. 01.04.2013 முதல் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் வழங்கப்படுமா என்ற விபரம்
2. 8 ஒட்டுனர்களுக்கு மட்டும் ஊதியம் கணக்கிடப்பட்டுள்ளது. மைக்ரோ பிளான் படி 12 ஓட்டுனர்கள் தேவைப்படுகிறார்கள்.
3. 4 டம்பர் பிளேசர் வாகனத்திற்கான எரி பொருள் செலவினம் மட்டும் கணக்கிடப்பட்டுள்ளது. மைக்ரோ பிளான்படி 5 டம்பர் பிளேசர் வாகனம் மற்றும் 2 டிராக்டர்களுக்கு எரி பொருள் செலவினம் கணக்கிடப்படவேண்டும்.
4. ESI, EPF, ஒப்பந்தக்காரர் பட்டியலில் பிடித்தம் செய்து நகராட்சி செலுத்துவதற்கு பதில் தம்மால் செலுத்த வழங்குதல்.
5. சேவை வரி உண்டா ? என்பதை உறுதி செய்தல்
6. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 20 பேர் ஊதியம் கணக்கிடுதல் – போன்ற விபரங்கள் குறிப்பிட்டதுடன் ஒப்பந்தக்காலத்தையும் மூன்றாண்டுகள் என மாற்றம் செய்து திருத்திய Letter of Award (LOA) வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்காண் சூழ்நிலையில் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட Implementation Plan, Micro Plan மற்றும் கடிதங்கள் மீது தொழில் நுட்ப ரீதியாக நகராட்சி பொறியர் குறிப்பு பெறப்பட்டதில் மேற்படி ஒப்பந்தக்காரர் பணியாளர்களை குறைத்து டிப்பர் ஆட்டோக்களை தனது சொந்த செலவில் பயன்படுத்திட அனுமதி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட விலை விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யாது Implementation Plan, Micro Plan மற்றும் ஒப்பந்தக்காரரின் 06.07.2013 மற்றும் 02.08.2013 – ம் தேதிய கடிதம் படி திட்டம் செயல்படுத்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு பொருள் வைத்து மேல் நடவடிக்கை தொடர அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. ஒப்பந்ததாரர் டெண்டர் கேட்ட தொகைக்கு மிகையாகமல் செய்ய மன்றம் அனுமதி பெறலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். கோப்பு எண்.18831/2012/எச்.1

**தீர்மான எண் : 3057 – MicroPlan படி திட்டம் செயல்படுத்திட தீர்மானிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் கடைகளுக்கு 31.03.2013 – ல் உரிம காலம் முடிவடைந்தது , 01.04.2013 முதல் 3 ஆண்டுகளுக்கு அரசாணை எண்.92 (ந.நி.ம.கு.வ.துறை) நாள் 03.07.2007 – ன் படி உரிமம் நீடித்து வழுங்க கேட்டு, புதுப்பித்தல் கட்டணம் செலுத்தியுள்ளதால் 01.04.2013 முதல் 31.03.2016 முடிய உரிமம் நீடித்து வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | 31.03.2013 முடிய மாத வாடகை ரூ. | 01.04.2013 முதல் 15% உயர்வு செய்யப் பட்ட மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ஜே.சகாயராணி | காமராஜ் 5 மாடி கட்டிடம் இரண்டாம் தளம் அறை | 2509/– | 2885/– |
| 2 | திரு.ஆர்.சுகுமாரன் | காமராஜ் 5 மாடி கட்டிடம் அடித்தளம் சைவ ஹோட்டல் | 20641/– | 23,737/– |
| 3 | திரு.எ.ராஜன் | கடை எண்.1.அண்ணாபேருந்து நிலையம் | 5722/– | 6780/– |
| 4 | திரு.சி.பிச்சை நாடார் | கடை எண்.2.அண்ணாபேருந்து நிலையம் | 2987/– | 3435/– |
| 5 | திரு.ஜெரோன் | கடை எண்.4அண்ணாபேருந்து நிலையம் | 2987/– | 3435/– |
| 6 | திரு.ஜே.ஜேசுராஜன் | கடை எண்.6.அண்ணாபேருந்து நிலையம் | 4146/– | 4768/– |
| 7 | திரு.செல்லப்பெருமாள் | கடை எண்.1.சரலுார் | 457/– | 526/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | திரு.ஜே.ஜேசுராஜன் | கடை எண்.2.சரலூர் | 457/– | 526/– |
| 9 | திரு.எஸ்.வெஙகடேஷ் | கடை எண்.3.சரலூர் | 699/– | 804/– |
| 10 | திரு.எஸ்.தஙகவேல் | கடை எண்.5.சரலூர் | 698/– | 803/– |
| 11 | திருமதி.நிதிலா டேவிட் | கடைஎண்.1. வடசேரி பேருந்து நிலையம் | 8270/– | 9511/– |
| 12 | திரு.பி.எ.மோகன் | கடைஎண்.2. வடசேரி பேருந்து நிலையம் | 7192/– | 8271/– |
| 13 | திரு.எம்.இளஙகோ | கடைஎண்.3. வடசேரி பேருந்து நிலையம் | 4143/– | 4764/– |
| 14 | திரு.எஸ்.பரமேஸ்வரதாஸ் | கடைஎண்.7. வடசேரி பேருந்து நிலையம் | 5111/– | 5878/– |
| 15 | திரு.பி.துரைசுவாமி | கடைஎண்.11. வடசேரி பேருந்து நிலையம் | 15520/– | 17848/– |
| 16 | திரு.என்.முருகன் | கடைஎண்12. வடசேரி பேருந்து நிலையம் | 13436/– | 15451/– |
| 17 | திரு.ஜே.பெஞ்சமின் பெரின் | கடைஎண்.13. வடசேரி பேருந்து நிலையம் | 4848/– | 5575/– |
| 18 | திருமதி.இ.புஷ்பம் | கடைஎண்.14. வடசேரி பேருந்து நிலையம் | 4216/– | 4848/– |
| 19 | திருமதி.ஜி.சரசம் | கடைஎண்.15. வடசேரி பேருந்து நிலையம் | 4265/– | 4905/– |
| 20 | திரு.அழகேசன் | கடைஎண்.16 வடசேரி பேருந்து நிலையம் | 4154/– | 4777/– |
| 21 | திரு.அழகேசன் | கடைஎண்.17 வடசேரி பேருந்து நிலையம் | 4256/– | 4894/– |
| 22 | திரு.டி.செல்லம் | கடைஎண்.18 வடசேரி பேருந்து நிலையம் | 4546/– | 5228/– |
| 23 | திருமதி.செரினா சாகுல் ஹமீது | கடைஎண்.19 வடசேரி பேருந்து நிலையம் | 4434/– | 5099/– |
| 24 | திருமதி.செரினா சாகுல் ஹமீது | கடைஎண்.20 வடசேரி பேருந்து நிலையம் | 5099/– | 5864/– |
| 25 | திரு.விஜய சேகர் | கடைஎண்.6 வடசேரி பேருந்து நிலையம் | 8097/– | 9312/– |
| 26 | திரு.பி.ராஜேஷ் | கடைஎண்.1 கிருஷ்ணன்கோவில் | 360/– | 414/– |
| 27 | திரு.பி.ராஜேஷ் | கடைஎண்.2.கிருஷ்ணன்கோவில் | 360/– | 414/– |
| 28 | திரு.ற்றி.பாலையா | ஸ்டேட் பாஙக் எதிர்புறம் பெட்டிக்கடை | 404/– | 465/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | திரு.எம்.சேவியர் | கடை எண்.7, பெதஸ்தா வணிக வளாகம் | 1540/– | 1771/– |
| 30 | திரு.ஜாண் லியோன்சிங | கடை எண்.10 ‘’ | 1521/– | 1749/– |
| 31 | திருமதி.ஆர்.பத்மாவதி | கடை எண்.31 ‘’ | 1589/– | 1827/– |
| 32 | திரு.அகம்மது நஸீர் | கடை எண்.44 ‘’ | 2818/– | 3241/– |
| 33 | திரு.பி.ரெகு | அறை எண்.1 வடசேரி நயினார் மேல் மாடி | 555/– | 638/– |
| 34 | திருமதி.தஙகபாய் | அறை எண்.8 வடசேரி நயினார் மேல் மாடி | 661/– | 760/– |
| 35 | திரு.பி.ராஜசேகர் | அறை எண்.14 வடசேரி நயினார் மேல் மாடி | 608/– | 699/– |
| 36 | திருமதி.தமிழ்செல்வி | கடை எண்.4 சரலூர் | 416/– | 478/– |
| 37 | திரு.ஜான் கிளிட்டஸ் | கடை எண். கணேசபுரம் | 1217/– | 1340/– |
| 38 | திரு.பி.ரெகு | புதிய கடை எண்.8 வடசேரி பேருந்து நிலையம் | 13778/– | 15845/– |
| 39 | திரு.அமீர் உசைன் | புதிய கடை எண்.9 வடசேரி பேருந்து நிலையம் | 13689/– | 15742/– |
| 40 | திரு.ஜெயசேகர் | புதிய கடை எண்.10 வடசேரி பேருந்து நிலையம் | 12515/– | 14392/– |
| 41 | திரு.ஜே.ஜார்ஜ் | புதிய கடை எண்.11 வடசேரி பேருந்து நிலையம் | 23020/– | 26473/– |
| 42 | திரு.இ.ஜி.எப்.ஜென்சன் | புதிய கடை எண்.12 வடசேரி பேருந்து நிலையம் | 23200/– | 26680/– |
| 43 | திரு.கே.ஜார்ஜ் | கடை எண்.4 வடசேரி பேருந்து நிலையம் | 8097/– | 9312/– |
| 44 | திரு.இ.ஜி.எப்.ஜென்சன் | கடை எண்.5 வடசேரி பேருந்து நிலையம் | 9312/– | 10709/– |
| 45 | திரு.சி.குமார் செல்வின் | கடை எண்.36 பெதஸ்தா வணிக வளாகம் | 1528/– | 1757/– |

அலுவலக குறிப்பு – மேற்படிகடைகளுக்கு நடை முறையில் உள்ள அரசாணை எண்.92 (ந.நி.ம.கு.வ.துறை) நாள் 03.07.2007 – ன்படி தற்போதுள்ள மாத வாடகையில் 15% உயர்வு செய்து , 0104.2013 முதல் 31.03.2016 முடிய 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழஙகி அனுமதிக்கலாம்.

கோப்புஎண்.26388/2012/அ13

**தீர்மான எண் : 3058 – அனுமதிக்கப்பட்டது.**

**3.** நாகர்கோவில் நகராட்சி ஏற்கனவே உள்ள பகுதிகளுடன் புதிதாக இணைக்கப்பட்ட நான்கு ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சி ஆகிய பகுதிகளையும் சேர்த்து ஒட்டு மொத்த நகராட்சி பொதுமக்களின் அடிப்படை தேவையாகிய குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது **17.12.2012** – ல் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டத்தில் அறிவிப்பு எண்.**35** – ன் வாயிலாக குழித்துறையாறு கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்த அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி நாகர்கோவில் நகர்மன்றத்தில் தீர்மானம் எண்.**1793** மற்றும் **1794** நாள் **20.12.2012 –** ன் படி அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. அதில் குழித்துறையாற்றினை நீராதாரமாக கொண்டு **40 –** க்கும் மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருவதாகவும் குழித்துறையாற்றில் உபரி நீர் **180** மில்லியன் கன அடி மட்டுமே உள்ளதாகவும் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு தேவையான **555** மில்லியன் கன அடி தண்ணீரை குழித்துறையாற்றிலிருந்து எடுக்க முடியாது எனவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் அவர்களது **16.08.2013 –** ம் தேதிய ந.க.எண்.**4657**/கோ.**55**/இ.அ.வ.உ/**2013** எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெருஞ்சாணி அருகில் புத்தன் தடுப்பு அணையின் மேல் பக்கத்தில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக கிணறு அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மண்டல விஞ்ஞான குடிநீர் ஆதாரம் தீர்மானிக்கும் குழுவினரால் **26.06.2013** அன்று ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளதாகவும் இந்த கருத்துருவினை பொதுப்பணித்துறை தண்ணீர் பயன்பாட்டுக்குழு (WUC) நிர்வாக பொறியாளருக்கு அனுப்பியதில் கோதையாறு வடிநில கோட்டம் நீராதார அமைப்பு பொதுப்பணித்துறை செயற் பொறியாளரால் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு வினாடிக்கு **18** c/s பெருஞ்சாணி அணையிலிருந்து பெற தடையில்லை எனவும் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குழித்துறையாறு கூட்டு குடிநீர் திட்டத்திற்கு பதிலாக பெருஞ்சாணி அருகில் புத்தன் தடுப்பு அணையின் மேல் பக்கத்தில் கிணறு அமைக்க ஒப்புதல் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அனுமதி பெற்று ஒப்புதல் வழஙக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.ந.க.எண்.**16795/2011**/இ**2**

**தீர்மான எண் : 3059 – அனுமதிக்கப்பட்டது.**